TAMILTH Kancheepuram 1 Regional_01 214544 HT221862

● விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, பல்வேறு இடங்களில் வைத்து வழிபாடு செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு சென்னை பட்டினப்பாக்கம் கடற்கரையில் நேற்று கரைக்கப்பட்டன.

படங்கள்: எஸ்.சத்தியசீலன்

தொழில் முனைவோருக்கான ட்ரோன் பயிற்சி சென்னையில் 3 நாட்கள் நடக்கிறது

■ சென்னை

கிண்டியில் செயல்பட்டு வரும் தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ட்ரோன் பயிற்சி வரும் செப்.9-ம் தேதிமுதல் செப்.11-ம் தேதிவரை 3 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. காலை 10 முதல் மாலை 5 மணி வரை பயிற்சி அளிக்கப்படும்.

இதில் ட்ரோன் இயக்குவதற்கான அடிப்படை விதிமுறைகள், ட்ரோன் வகைகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள், பராமரிப்பு முறைகள், அசெம்பிளிங் போன்ற ட்ரோன் தொழில்நுட்பங்கள் குறித்து தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் பயிற்சி வழங்கப்படும். இத்துடன் அரசின் நிதியுதவிகள், மானியங்கள் குறித்தும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் பங்கேற்க 10-ம் வகுப்பு தேர்ச்சியுடன், 18 வயதுக்கு மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில்முனைவோர் விண்ணப்பிக்கலாம். பயிற்சி பெறுபவர்களுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி வசதியும் ஏற்படுத்தி தரப்படும். கூடுதல் விவரங்களுக்கு www.editn.in என்ற இணையதளத்தையும், 9543773337, 9360221280 என்ற செல் போன் எண்களையும் தொடர்பு கொள்ளலாம். முன்பதிவு அவசியம்.

கொடுங்கையூர், பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களில்

43 லட்சம் டன் பழைய கழிவுகள் அகற்றம்

■ சென்னை

சென்னை மாநகராட்சி சார்பில் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் பயோமைனிங் முறையல் இதுவரை 43 லட்சம் டன் பழைய கழிவுகள் அகழ்ந்தெடுத்து அகற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை மாநகராட்சிப் பகுதி 426 சதுர கி.மீ பரப்பளவு கொண்டது. இங்கு ஒரு கோடி மக்கள் வசித்தும், வந்து சென்றும் வருகின்றனர். இங்கு சராசரியாக நாளொன்றுக்கு 6,300 டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. மண்டலம் 1 முதல் 8 வரை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திலும், மண்டலம் 9 முதல் 15 வரை பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திலும் திடக்கழிவுகள் பல்லாண்டு காலமாக கொட்டப்பட்டு வந்தன.

மாநகர் விரிவாக்கம், மக்கள் தொகை அதிகரிப்பு, வணிக செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால், பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய 2 வளாகங்களிலும் குப்பை கொட்டுவது அதிகரித்து, சுற்றுச்சூழல் மாசு ஏற்படும் நிலை உருவானது. இதனைத் தொடர்ந்து, பெருங்குடியிலும், கொடுங்கையூரிலும் உள்ள திடக்கழிவுகள் பயோமைனிங் முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன.

பெருங்குடி வளாகம் 250 ஏக்கர் கொண்டது. இதில் 225 ஏக்கர் பரப்பளவில் திடக்கழிவு கொட்டப்பட்டு வந்தது. இதில் 27.50 லட்சம் டன் அளவில் திடக்கழிவுகள் உள்ளன. இவற்றை பயோமைனிங் முறையில் அகழ்ந்தெடுத்து, அகற்றி நிலத்தை மீட்டெடுக்கும் பணி ரூ.350.65 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அங்கு 2022-ம் ஆண்டு முதல் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 25.30 லட்சம் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. 94.29 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இதர திடக்கழிவுகளை இந்த ஆண்டு இறுதிக்குள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் 342.91 ஏக்கர் கொண்டது. இதில் 252 ஏக்கர் பரப்பளவில் திடக்கழிவுகொட்டப்பட்டு வந்தது. அவற்றை ரூ.641 கோடியில் பயோமைனிங் முறையில் அகழ்ந்தெடுத்து அகற்றும் பணி கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது. அங்கு தற்போது குப்பையை பயோமைனிங் முறையில் அகழ்ந்தெடுத்து அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்கு 66.52 லட்சம் டன் கழிவுகள் உள்ளன. அதில் இதுவரை 18.03 லட்சம் டன் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. இங்கு 3 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் மாநகராட்சி சார்பில் ரூ.57 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுவேலி அமைத்து குழாய் மூலம் நீர்ப்பாசன வசதியுடன் சுமார் 1500 பசுமை மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறாக பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களிலிருந்து இதுவரை 43.33 லட்சம் டன் திடக்கழிவுகள் அகழ்ந்தெடுத்து, 97.29 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கணினி அவசரநிலைக் குழு மூலம்

தமிழகத்தில் சந்தேகத்துக்குரிய 80 ஆயிரம் ஐபி முகவரிகள் முடக்கம்

அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தகவல்

■ சென்னை

தமிழ்நாடு கணினி அவசரநிலை குழு மூலம், சந்தேகத்துக்குரிய 80 ஆயிரம் ஐபி முகவரிகள் முடக்கப்பட்டுள்ளதாக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக அரசின் தகவல் தொழில்நுட்ப சொத்துகள், சேவைகளை பாதுகாக்கும் நோக்குடன் முதல் இணைய பாதுகாப்புக் கொள்கை கடந்த 2020-ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

அதை தொடர்ந்து, கிளவுட் கம்ப்யூட்டிங் உள்ளிட்ட தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப புதிய நடைமுறைகளை சேர்க்கவும், புதிய டிஜிட்டல் அச்சுற்றுதல்களை எதிர்கொள்ளவும் இணைய பாதுகாப்புக் கொள்கை 2.0 கடந்த 2024-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதை திறம்பட செயல்படுத்தும் விதமாக, தகவல் தொழில்நுட்பவியல், டிஜிட்டல்சேவைகள் துறை மூலம் தமிழ்நாடு கம்ப்யூட்டர் எமர்ஜென்சி ரெஸ்பான்ஸ் டீம் (கணினி அவசரநிலை பதில் அளிப்பு குழு) உருவாக்கப்பட்டது.

எல்காட் நிறுவனம்

இணைய பாதுகாப்புக்கான உள்கட்டமைப்புக்காக, மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையத்துடன் இணைந்து எல்காட் நிறுவனம் இந்த குழுவை உருவாக்கியது. தன்னாட்சி அமைப்பான இது அனைத்து அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் 500-க்கும் மேற்பட்ட அரசு இணையதளங்கள் கையாளப்பட்டு வருகின்றன. அதேபோல, 1,200 தகவல் தொழில்நுட்ப சொத்துகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சைபர் பாதுகாப்பு குறித்த 130 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 3,200 அதிகாரிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

அதில், 36 தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரிகள், 103 தகவல் பாதுகாப்பு அதிகாரிகள் அரசுத் துறைகளில் நியமனமும் செய்யப்பட்டுள்ளனர்.

இத்துடன், தமிழகத்தில் சந்தேகத்துக்குரிய 80,039 ஐபி முகவரிகள் (IP address - இணைய இணைப்பு பெற்றுள்ள சாதனங்களுக்கான பிரத்யேக அடையாள எண்) கண்டறியப்பட்டு முடக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில்

பெசன்ட்நகர் ஒதுக்கீடுதாரர்களுக்கு வட்டி தள்ளுபடி

மாவட்ட ஆட்சியர் தகவல்

■ சென்னை

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பெசன்ட் நகர் கோட்டத்துக்குட்பட்ட ஒதுக்கீடுதாரர்களுக்கு வட்டி தள்ளுபடி சலுகை அறிவிக்கப்பட்டுள்ளதாக சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பெசன்ட்நகர் கோட்டத்துக்குட்பட்ட திட்டப் பகுதிகளில் தவணை முறையில் ஒதுக்கீடு பெற்றுள்ள ஒதுக்கீடுதாரர்கள், தங்களது நிலுவைத் தொகையை செலுத்த கடந்த ஆக. 4-ம் தேதி வெளியிட்ட அரசாணையில் பல்வேறு வட்டி சலுகைகளை தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன்படி ஒதுக்கீடு பெற்ற மனை, வீடு மற்றும் அடுக்குமாடி குடியிருப்புக்கான மாத தவணை தொகையை தாமதமாக செலுத்தியதற்கான முழு அபராத வட்டி, வட்டி முதலாக்கத்துக்காக விதிக்கப்படும் வட்டி, நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்துக்கான 5 மாத வட்டி (ஆண்டுக்கு) ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

இந்த சலுகை வரும் 2026 மார்ச் 31-ம் தேதி வரை செயல்படுத்தப்படும். எனவே பெசன்ட் நகர் கோட்டத்துக்குட்பட்ட திட்டங்களில் ஒதுக்கீடு பெற்று, 2015 மார்ச் 31-ம் தேதிக்கு முன்பு தவணைக் காலம் முடிவுற்றும் நிலுவை தொகையை செலுத்தாமல் உள்ள ஒதுக்கீடுதாரர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி நிலுவைத் தொகை முழுவதையும் ஒரே தவணையாக செலுத்தி வாரிய விதிகளின்படி விற்பனை ஆவணம் பெற்று பயனடையலாம்.

தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகம்

தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனத்துடன் ஒப்பந்தம்

தொழில் சார்ந்த படிப்புகளை வழங்க நடவடிக்கை

■ சென்னை

தொழில் சார்ந்த படிப்புகளை சான்றிதழ் பாடங்களாகவும், பட்டய பாடங்களாகவும் வழங்குவதற்காக, தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனத்துடன் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனத்துடன் இணைந்து திறன் மேம்பாட்டுக்கான தொழிற்பாடங்களை வழங்குவதற்கு 5 ஆண்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கையெழுத்தானது.

மாதவரம் பால் பண்ணையில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வளாகத்தில் தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் அகிலேஷ் மிஸ்ரா முன்னிலையில் பல்கலை. பதிவாளர் மற்றும் துணைவேந்தர் (பொறுப்பு) இர.நரேந்திர பாபு, தேசிய திறந்தநிலைப் பள்ளி நிறுவனத்தின் தொழிற்கல்வி இயக்குநர் டி.என்.கிரி ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்குநர் த.சத்தியமூர்த்தி, தேசிய திறந்தநிலைப் பள்ளி நிறுவனத்தின் இணை இயக்குநர் (நிர்வாகம்) மற்றும் மண்டல இயக்குநர் வி.சந்தானம் ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் தொழில் சார்ந்த படிப்புகள் சான்றிதழ் பாடங்களாகவும், பட்டய பாடங்களாகவும் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக 2 சான்றிதழ் பயிற்சிகள் முறையே கோழி வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் உற்பத்தியும், மேலும் 2 பட்டய படிப்புகள் முறையே உணவு, உணவு பானங்கள் உற்பத்தி மற்றும் பேக்கரி, சாக்லேட் பொருட்கள் உற்பத்தி ஆகிய தொழில் சார்ந்த படிப்புகள் வழங்கப்பட உள்ளன.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் தேவைக்கேற்ப புதிய கல்வி பாடங்களையும், புதிய தொழில் சார்ந்த பாடத்திட்டங்களையும் உருவாக்க வழிவகை செய்யப்படும் என்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

● சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள மெட்ராஸ் கேரள சமாஜத்தில் ஓணம் பண்டிகை கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நேற்று தொடங்கின. இதில் அத்தப்பூ கோலமிட்ட பெண்கள்.

படம்: எஸ்.சத்தியசீலன்

2 வாரமாக நீடிக்கும் போக்குவரத்து ஊழியர்களின் காத்திருப்பு போராட்டம்

■ சென்னை

போக்குவரத்து ஊழியர்களின் காத்திருப்பு போராட்டம் 2 வாரங்களைத் தாண்டி நீடித்து வருகிறது. கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான கால வரையறையை அரசு அறிவிக்காத வரை போராட்டம் தொடரும் என சிஐடியு தெரிவித்துள்ளது.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஊதிய ஒப்பந்த நிலுவைத் தொகையை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சிஐடியு சார்பில் மாநிலம் முழுவதும் கடந்த 18-ம் தேதி காத்திருப்பு போராட்டம் தொடங்கியது. சென்னை, பல்லவன் சாலையில் காத்திருப்பு போராட்டத்தில் பங்கேற்றவர்களை காவல் துறையினர் கைது செய்ததைத் தொடர்ந்து, சாலை மறியல் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. இதன் தொடர்ச்சியாக கோரிக்கைகளில் ஒன்றான ஓய்வு பெற்றவர்களுக்கு (2024 ஏப்ரல் வரை) பணப் பலனும் வழங்கப்பட்டது.

ஆனால், இதுவரை ஓய்வு பெற்ற அனைவருக்கும் பணப்பலன் வழங்கப்படவில்லை. எனவே, அனைவருக்கும் பணப்பலன் வழங்குவதற்கான காலவரையறையை மட்டுமாவது நிர்ணயிக்க வேண்டும் என வலியுறுத்தி, 2 வாரங்களாகப் போராட்டம் நீடித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக நேற்றும் காத்திருப்பு போராட்டம் தொடர்ந்தது. சென்னையில் அயனாவரம், வடபழனி ஆகிய பணிமனைகளில் நடைபெற்ற போராட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

இதில் பங்கேற்ற ஊழியர்கள் கூறும்போது, "கடந்த அதிமுக ஆட்சியில் நடந்த அதே தவறு, திமுக ஆட்சியிலும் நடக்கிறது. மத்திய அரசு நிதி வழங்காததால் கூட்டாட்சித் தத்துவம் பாதிக்கப்படுவதாக முதல்வர் கூறுகிறார். ஆனால் அவரே எங்கள் பணத்தை வைத்திருக்கிறார். புதிய ஓய்வூதியத் திட்ட மசோதா ஆதரவிலேயே அதிமுகவும், திமுகவும் இரட்டை நிலைப்பாடு எடுத்திருக்கின்றன. எனவே, மாபெரும் போராட்டங்கள் மூலமாகவே போக்குவரத்து ஊழியர்களின் கோரிக்கையை வென்றெடுக்க முடியும்" என்றனர்.

பங்குதாரரர்களுக்கான அறிவிப்பு

(1) அறிவிப்பு - இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், 25.09.2023 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 09/ 2023 ன் படியும் நிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சகத்தின் (MCA) சுற்றறிக்கை எண். 20 / 2020 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதன்படியும் செபி அமைப்பால் வெளியிடப்பட்ட 07.10.2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI / HO / CFD /PoD – 2 / 2 / P / CIR / 2023 / 167 ன் படியும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய செபி அமைப்பின் 11.07.2023 தேதியிட்ட மைய சுற்றறிக்கையின் படியும் (இதன் பின்னர் கூட்டாக சுற்றறிக்கைகள் என்று குறிப்பிடப்படும்) மேலும் நிறுவனங்கள் சட்டம் 2013 ன் கூறுகளின்படியும் அங்கு உள்ள விதிகளின்படியும் நிறுவனத்தின் வருடாந்திர பொதுக் கூட்டமானது , காணொளிக் காட்சி / பிற ஒலி ஒளி சாதனங்கள் (VC / OAVM) வாயிலாக , செப்டெம்பர் 22 , 2025 (திங்கட் கிழமை) தேதியன்று மதியம் 01.00 PM மணியளவில் நடத்த திட்டமிடப்படுள்ளது.

(2) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பு மற்றும் 2024 – 25 ஆண்டுக்கான ஆண்டு அறிக்கையின் மின்னணு நகல்கள் தங்கள் இ- மெயில் முகவரிகளை நிறுவனத்துடனும் பதிவாளர் மற்றும் மாற்ற முகவர் (RTA) மெசர்ஸ். கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் உடனும் டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் உடனும் பதிவு செய்து கொண்டுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் ஆகஸ்ட் 30 , 2025 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பையும் ஆண்டு அறிக்கையையும் நிறுவனத்தின் www.khazanch.co.in இணையதளத்திலிருந்தும் பங்குச் சந்தையின் இணையதளம் ஆன www.bseindia.com லிருந்தும் உறுப்பினர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(3) பதிவாளர் மற்றும் முகவர் உடன் / டெபாசிட்டரி பங்கேற்பாளர் உடன் தங்கள் இ- மெயில் முகவரிகளைப் பதிவு செய்து கொள்ளாத உறுப்பினர்கள்,வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பையும் ஆண்டு அறிக்கையையும் பெறுவதற்காக, வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

(4) நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 91 மற்றும் அங்கு உள்ள விதிகளுக்கு இணங்கவும் மற்றும் செபி (பட்டியலிடுதல் கடப்பாடு மற்றும் தெரிவித்தல் தேவைகள்) நெறிமுறைகள் 2015 ன் நெறிமுறை 42 க்கு இணங்கவும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் நடத்தும் நோக்கத்தின் பொருட்டு , நிறுவனத்தின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்ற புத்தகங்கள், செப்டெம்பர் **16, 2025** (செவ்வாய்க் கிழமை) முதல் செப்டெம்பர் **22, 2025** (திங்கட் கிழமை) வரை (இரு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டதாக இருக்கும்

(5) கெடுத் தேதியான செப்டெம்பர் **15,2025** நாளது வரை தங்கள் பங்குகளை பிசிக்கல் வடிவத்திலோ டிமெடிரயலைசுடு படிவம் வடிவத்திலோ வைத்துள்ள உறுப்பினர்கள் , வருடாந்திர பொதுக் கூட்ட தருணத்தில் , சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) ன் மின்னணு வாக்களிக்கும் அமைப்பு வாயிலாக, வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள அலுவல்களுக்காக தங்கள் வாக்குகளை மின்னணு ரீதியாக செலுத்தலாம்.

(6) வருடாந்திர பொதுக் கூட்ட தருணத்தில், தொலைநிலை இ – வோட்டிங் மற்றும் இ-வோட்டிங் இரண்டும் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் நடத்தப்படுவதற்கான கூர்ந்தாய்வாளர் (Scrutinizer) ஆக, திரு. பங்கஜ் மேத்தா என்பவர் பிரதிநிதியாக இருக்கும் தொழில்முறை நிறுவன செயலாளர்களான மெசர்ஸ். அ.கே.ஜெயின் அசோசியேட்ஸ் நிறுவனத்தை இயக்குநர்கள் குழு நியமனம் செய்துள்ளது.

(7) உறுப்பினர்கள் கீழ்க்காணும் அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும் -

(1) வருடாந்திர பொதுக் கூட்ட தருணத்தில் இ – வோட்டிங் மற்றும் தொலைநிலை இ – வோட்டிங் வாயிலாக, வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பில் வரையறுக்கப்பட்டுள்ள அலுவல்கள் மேற்கொள்ளப்படும் .

(2) செப்டெம்பர் 19, 2025 வெள்ளிக்கிழமையன்று தொலைநிலை இ – வோட்டிங், காலை 9.00 மணியளவில் தொடங்கும்

(3) தொலைநிலை இ – வோட்டிங் என்பது செப்டெம்பர், 21, 2025 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 5.00 மணியளவில் முடிவடையும் .

(4) தொலைநிலை இ- வோட்டிங் மாட்யூல் என்பது செப்டெம்பர் 21, 2025 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 5.00 மணிக்குப் பிறகு செயல்படாது .

(5) வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தொலைநிலை இ- வோட்டிங் அல்லது இ- வோட்டிங் வாயிலாக வாக்களிக்கும் தங்கள் தகுதியை உறுதி செய்து கொள்வதற்கான கெடுத் தேதி செப்டெம்பர் 15 , 2025

(6) உறுப்பினர்கள் பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ளவும் -

(அ) செப்டெம்பர் 21, 2025 தேதியன்று மாலை 5.00 மணிக்குப் பிறகு தொலைநிலை இ- வோட்டிங் மாட்யூல் என்பது செயல்படாது. தீர்மானத்தின் மீது ஒரு முறை உறுப்பினர் வாக்கு செலுத்திய பிறகு அவர் அதனை மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார் .

(ஆ) வருடாந்திர பொதுக் கூட்ட தருணத்திலும் வாக்கு செலுத்தும் வசதி உண்டு. வருடாந்திர பொதுக் கூட்டத்தில் காணொளிக் காட்சி / பிற ஒலி ஒளி சாதனங்கள் மூலமாக ஆஜர் ஆன உறுப்பினர்கள், தீர்மானங்கள் மீது தொலைநிலை இ-வோட்டிங் மூலம் வாக்கு செலுத்தாத பட்சத்தில், வாக்கு செலுத்த அவர்களுக்கு தடை இல்லாத பட்சத்தில் அவர்களுக்கு தங்கள் வாக்குகளை இ – வோட்டிங் மூலம் செலுத்த தகுதி உண்டு.

(இ) வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன்பாக, தொலைநிலை இ – வோட்டிங் மூலம் தங்கள் வாக்குகளை செலுத்தியிருந்த உறுப்பினர்களும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு மறுமுறை வாக்கு அளிக்க முடியாது.

(ஈ) கெடுத் தேதி நாளன்று வரை, உறுப்பினர்கள் பதிவேட்டில் பெயர் பதிவு ஆகி உள்ள நபர் அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயன் பெறும் உரிமையாளர்கள் பதிவேட்டில் இடம் பெற்றுள்ள நபர் , வருடாந்திர பொதுக் கூட்ட தருணத்தில் தொலைநிலை இ- வோட்டிங் வசதியை அல்லது இ – வோட்டிங் வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(7) டிமெடிரயலைசுடு வடிவத்தில் பங்குகளை வைத்துள்ளவர்கள் , பிசிக்கல் வடிவில் வைத்துள்ளவர்கள் , தங்கள் இ-மெயில் முகவரிகளைப் பதிவு செய்து கொள்ளாத உறுப்பினர்கள், தொலைநிலையில் வாக்களிக்கும் வழிமுறை குறித்த தகவல்கள் வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளது. அவற்றை நிறுவனத்தின் www.khazanchi.co.in இணையதளத்திலும் காணலாம்.

(8) வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்தும் இ- வோட்டிங் சிஸ்டம் என்பதன் மூலம் இ -வோட்டிங் செய்தல் குறித்தும் ஏதேனும் விசாரணை அல்லது சிக்கல் இருக்குமேயானால் , www.evotingindia.com இணையதளத்தில் ஹெல்ப் செக்ஷன் ல் உள்ள அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் இ -வோட்டிங் கையேட்டைப் பார்வையிடவும் . அல்லது helpdesk.evoting@cdslindia.com க்கு மெயில் அனுப்பவும் அல்லது CDSL ன் திரு . ராகேஷ் தெவ்லி யை தொடர்பு கொள்வும் (022 – 23058542) அல்லது அழையுங்கள் டோல்ப்ரீ எண். 1800 21 09911

கஜான்ச்சி ஜூவல்லர்ஸ் லிமிடெட் - க்காக
சாக்ஷி ஜெயின்
நிறுவன செயலர்

இடம் : சென்னை
தேதி : ஆகஸ்ட் 30, 2025

தமிழகம் முழுவதும் இதுவரை 4 வாரம் நடந்த

'நலம் காக்கும் ஸ்டாலின்' முகாம்களில் 2 லட்சம் பேர் பயன்

■ சென்னை

தமிழகம் முழுவதும் இதுவரை 4 சனிக்கிழமைகளில் நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் சிறப்பு முகாம்கள் மூலம் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்.

தமிழக சட்டப்பேரவையில் 2025-26-ம் ஆண்டுக்கான சுகாதாரத் துறை மானியக் கோரிக்கையில், உயர் மருத்துவ சேவைகள் வழங்க மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 'நலம் காக்கும் ஸ்டாலின்' சிறப்பு மருத்துவ முகாமை கடந்த 2-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றன.

அன்றைய தினம் 38 மாவட்டங்களில் 38 இடங்களில் நடந்த முகாம்களில் 44,418 பேர் பயன் பெற்றனர். இரண்டாவது சனிக்கிழமையான 9-ம் தேதி 48,046 பேர் பயனடைந்தனர். 16-ம் தேதி சனிக்கிழமை கிருஷ்ண ஜெயந்தி என்பதால் முகாம் நடைபெறவில்லை. மூன்றாவது வாரமாக கடந்த 23-ம் தேதி 56,245 பேர் பயன்பெற்றனர். இந்நிலையில், 4-வது வாரமாக 38 மாவட்டங்களில் 38 இடங்களில் நடந்த முகாம்களில் 57,077 பேர் பயனடைந்தனர். தமிழகம் முழுவதும் 4 சனிக்கிழமைகளில் நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் சிறப்பு முகாம்கள் மூலம் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர்.

பரிசோதனைகள் மட்டுமின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.